# வைணவத் திருக்கோயில்களுக்கு கட்டணமில்லா ஆன்மிக

**பயணம்** செல்லும் பக்தர்கள் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆன்மிக பயணம் செல்வதற்கு தேர்வு செய்து அனுமதிக்கப்படுவர்

1. ஆன்மிக பயணம் செல்லும் பக்தர்கள் இந்து மதத்தை சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
2. வைணவத் திருக்கோயில்கள் ஆன்மிக பயணம் செல்லும் பக்தர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவராகவும், 70 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வயது சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
4. வைணவத் திருக்கோயில்கள் ஆன்மிக பயணம் செல்லும் பக்தர்களுக்கு போதிய உடல் தகுதி இருத்தல் வேண்டும்.
5. வைணவத் திருக்கோயில்கள் ஆன்மிக பயணம் செல்லும் பக்தர்கள் தற்போது வசிக்கும் வீட்டின் நிலையான முகவரிக்கான ஆதாரம் இணைக்கப்படவேண்டும்.
6. வைணவத் திருக்கோயில்கள் ஆன்மிக பயணம் செல்லும் பக்தர்கள் தங்களுடன் சிறு குழந்தைகள் அழைத்து வர அனுமதி இல்லை.
7. ஆதார் கார்டு அல்லது நிரந்தரக் கணக்கு எண் (Pan card) நகல் இணைக்கப்பட வேண்டும்.
8. விண்ணப்பங்கள் அருகில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக் கொண்ட விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து அதே அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
9. மேலும் விண்ணப்பங்கள் இத்துறை வலைத்தளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் **(hrce.tn.gov.in).**
10. ஆன்மிக பயணம் செல்லும் பக்தரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அதற்கான வருமான சான்று உரிய வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும்.
11. பக்தர்கள் ஒரு முறை மட்டுமே இப்பயணத்தில் கலந்து கொள்ள முடியும்.

........

இணை ஆணையர் மண்டலம் :

| பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்ட வேண்டும் |
|---|

# வைணவத் திருக்கோயில்கள் ஆன்மிகப் பயணம்

## விண்ணப்பப் படிவம்

(விண்ணப்பப் படிவம் விடுதலின்றி முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2 | தகப்பனார் / கணவர் பெயர் | |
| 3 | இருப்பிட முகவரி<br>(தற்போது வசித்து வரும் இருப்பிட முகவரி மற்றும் பின்கோடு முழுமையாக குறிப்பிடவும்) | |
| 4 | பிறந்த தேதி மற்றும் வயது<br>(31.12.2023 அன்று 60 முதல் 70 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்) | வயது: |
| 5 | ஆதார் எண் (Aadhar No.) | |
| 6 | ஆண்டு வருமானம் | ரூ. |
| 7 | விண்ணப்பதாரரின் கணவர் / மனைவி (Spouse) விண்ணப்பித்துள்ள விவரம் | |
| 8 | கைபேசி எண் | |

| விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | | இணைக்கப்பட்டுள்ளதா ஆம் / இல்லை |
|---|---|---|
| 1 | இந்து மதத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழ்<br>(பள்ளி/கல்லூரிச் சான்றிதழ்/தொடர்புடைய வட்டாட்சியர் சான்று) | |
| 2 | பிறந்த தேதிக்கான சான்று<br>(பள்ளி / கல்லூரி / பிறப்புச் சான்று / ஆதார் / கடவுச்சீட்டு நகல்) | |
| 3 | இருப்பிட முகவரிக்கான சான்று<br>(குடும்ப அட்டை / ஆதார் / கடவுச்சீட்டு / வாக்காளர் அட்டை) | |
| 4 | பயணம் செய்ய உடல் தகுதி உள்ளவரா? | |
| 5 | ஆதார் அட்டை நகல் (Aadhaar Card) | |
| 6 | வருமான சான்றிதழ்<br>(வட்டாட்சியர் சான்று / வருமான வரி தாக்கல் அத்தாட்சி) | |
| 7 | பாஸ்போர்ட் சைஸ் போட்டோ – 2 | |

### உறுதி மொழி

இவ்விண்ணப்பத்தில் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அது தொடர்பாக நான் இணைத்துள்ள சான்றுகள் யாவும் உண்மை எனவும், ஆன்மிகப் பயணத்திற்கான நிபந்தனைகளை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் எனவும், பயணத்தின் போது எனக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் / மருந்துகள் அனைத்தையும் என்னுடன் கொண்டு வருவேன் எனவும் நான் உறுதியளிக்கிறேன்.

இவ்விண்ணப்பத்தில் நான் அளித்துள்ள விவரங்கள் மற்றும் இணைத்துள்ள சான்றுகள் உண்மையல்ல என்று உறுதி செய்யப்பட்டால், என் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறிவேன்.

நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்

# புரட்டாசி மாதத்தில், புகழ்பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கு மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா ஆன்மிகப் பயணம்

-----------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2024–2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள முக்கிய வைணவத் திருக்கோயில்க புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளும் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

தமிழ்நாட்டில் மக்கள் தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர். பல்வேறு திருக்கோயில்களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெரும் விருப்பமாகக் கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு,

2024–2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், "ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கும் இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட, தலா 1,000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள முக்கிய வைணவத் திருக்கோயில்களுக்கு புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளும் ஆன்மிக பயணத்தில் 1,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி (உணவு உட்பட) அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

<u>சென்னை மண்டலத்தில்</u>

1. அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி.
2. அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில், பெசன்ட் நகர்.
3. அருள்மிகு நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயில், திருவிடந்தை.
4. அருள்மிகு ஸ்தல சயனப் பெருமாள் திருக்கோயில், மகாபலிபுரம்.
5. அருள்மிகு நீர்வண்ணப் பெருமாள் திருக்கோயில், திருநீர்மலை

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

**காஞ்சிபுரம் மண்டலம்**

1. அருள்மிகு தேவராஜ பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்
2. அருள்மிகு வைகுண்ட பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்
3. அருள்மிகு விளக்கொளி பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்
4. அருள்மிகு பாண்டவதூத பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்
5. அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர்

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

**விழுப்புரம் மண்டலம்**

1. அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயில், விழுப்புரம்.
2. அருள்மிகு வைகுண்ட பெருமாள் திருக்கோயில், விழுப்புரம்.
3. அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயில், கோலியனூர்.
4. அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், பூவரசங்குப்பம்.
5. அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், பரிக்கல்.

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

**தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மண்டலம்**

1. அருள்மிகு சக்கரபாணி பெருமாள் திருக்கோயில், கும்பகோணம்.
2. அருள்மிகு சாரங்கபாணி பெருமாள் திருக்கோயில், கும்பகோணம்.
3. அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், உப்பிலியப்பன்கோயில்.
4. அருள்மிகு ஸ்ரீநிவாச பெருமாள் திருக்கோயில், நாச்சியார்கோயில்,
5. அருள்மிகு சாரநாத பெருமாள் திருக்கோயில், திருச்சேறை

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

**திருச்சி மண்டலம்**

1. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்.
2. அருள்மிகு புருஷோத்தம பெருமாள் திருக்கோயில், உத்தமர்கோயில்.
3. அருள்மிகு சுந்தராஜ பெருமாள் திருக்கோயில், அன்பில்
4. அருள்மிகு புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயில், திருவெள்ளறை
5. அருள்மிகு அப்பகுடத்தான் திருக்கோயில், கோவிலடி

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

**மதுரை மண்டலம்**

1. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்.
2. அருள்மிகு யோக நரசிம்ம பெருமாள் திருக்கோயில், ஒத்தக்கடை.
3. அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில், திருமோகூர்.
4. அருள்மிகு சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோயில், திருக்கோஷ்டியூர்.
5. அருள்மிகு கூடலழகர் பெருமாள் திருக்கோயில், மதுரை

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மண்டலம்

1. அருள்மிகு மாயக்கூத்தர் திருக்கோயில், பெருங்குளம்.
2. அருள்மிகு அரவிந்தலோசனர் திருக்கோயில், இரட்டைதிருப்பதி
3. அருள்மிகு தேவர்பிரான் திருக்கோயில், இரட்டை திருப்பதி திருக்கோயில், கள்ளபிரான்.
4. அருள்மிகு விஜயாசன பெருமாள் திருக்கோயில், நத்தம்.
5. அருள்மிகு காய்சினி வேய்ந்த பெருமாள் திருக்கோயில், திருப்புளியங்குடி
6. அருள்மிகு மகர நெடுங்குழைக்காதர் திருக்கோயில், தென்திருப்பேரை.
7. அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், ஆழ்வார் திருநகரி.
8. அருள்மிகு வைத்தமாநிதி பெருமாள் திருக்கோயில், திருக்கோளூர்.
9. அருள்மிகு வைகுண்ட பெருமாள் திருக்கோயில், கள்ளபிரான்

ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில்களுக்கான ஆன்மிகப் பயணம் நான்கு கட்டங்களாக, அதாவது 21.09.2024, 28.09.2024, 05.10.2024, 12.10.2024 ஆகிய நாட்களில் அந்தந்த மண்டலங்களில் தொடங்கப்பட உள்ளன.

இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்தகுடிமக்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளமான www.hrce.tn.gov.in–லிருந்து பதிவிறக்கம் செய்தோ அல்லது சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் நேரில் பெற்றோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து **19.09.2024–க்குள்** சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் ஒப்படைத்திட வேண்டும்.

மேலும், இது தொடர்பான விபரங்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின்

- கட்டணமில்லா தொலைபேசி எண் : 1800 425 1757,
- சென்னை மண்டலம் : 044–29520937, 9941720754,
- காஞ்சிபுரம் மண்டலம் : 044–29592380,
- விழுப்புரம் மண்டலம் : 04146–225262,
- மயிலாடுதுறை மண்டலம் : 04364–299258, மேலாளர் : 8807756474
- தஞ்சாவூர் மண்டலம் : 04362–238114,
- திருச்சி மண்டலம் : 0431–2232334,
- மதுரை மண்டலம் : 0452–2346445,
- தூத்துக்குடி மண்டலம் : 0461–2341144,
- திருநெல்வேலி மண்டல : 0462–2572783

ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். ஆகவே, புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களுக்கு ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் மூத்த குடிமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இறை தரிசனம் பெறலாம்.

********